**17.06.2022**

## முக்கிய கொள்கைகள் அமலாக்கம் , திட்டங்கள் செயலாக்கம் மற்றும் முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டது

முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோர்களின் துயர் களையும் பொருட்டு கடந்த 8 ஆண்டுகளில் முன்னாள் படைவீரர் நலத்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட திட்ட அமலாக்கம் / சாதனைகள் மற்றும் முக்கிய கொள்கை முடிவுகள் கீழ்காணுமாறு உள்ளது.

**ஓய்வூதியம்**

இந்திய அரசின் வரலாற்று சிறப்புமிக்க முடிவாக, முன்னாள் படைவீரர்களின் நெடுநாள் கோரிக்கையான, "ஒரே தரம், ஒரே ஓய்வூதியம், திட்டம்" (OROP) நவம்பர் 2015 ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

"ஒரே தரம் ஒரே ஓய்வூதியத் திட்டம்" நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக ஒத்திசைவு அட்டவணை 17.10.2010 நாளிட்ட அரசின் கடிதம் வாயிலாக வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டு ஒய்வு பெற்ற / மரணமுற்ற முன்னாள் படைவீரர்களின் கருத்தியிலான ஊதியத்தியனை பல்வேறு தரத்திற்கு ஏற்பவும் 4 வது, 5வது, 6வது ஊதிய கமிஷன்கள் ஏற்றவாறு நிர்ணயம் செய்திட வழிவகுக்கப்பட்டுள்ளது.

இதன் நிமித்தம், 25 லட்ச இராணுவ ஓய்வூதியதார்களில் சுமார் 20.60 இலட்சம் முன்னாள் படைவீரர்கள் பயன்பெற்றார்கள். இதன் பொருட்டு ரூ.10,795.4 கோடி ஊதிய நிலுவை தொகை 20,60,220 இராணுவ ஓய்வூதியதாரர்களுக்கும் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இதற்கென ரூ.7123 கோடி தொடர் செலவினம் ஏற்படுகிறது. அரசினால் 1.1.2006-க்கு முன் ஓய்வு பெற்ற அவில்தார் தகுதியுள்ளோருக்கு ஹானரி நாயப் சுபேதார் தரத்திற்கு நிகராக 2006 முதல் முன் ஓய்வூதிய மறுநிர்ணயக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.. இதனால் சுமார் 2006 ஆம் ஆண்டிற்கு முன்னதாக ஓய்வு பெற்ற 75,250 ஓய்வு பெற்ற அவில்தார்கள் பயன்பெற்றனர் உயர்த்தப்பட்ட சாதாரண குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு

குறைந்தபட்சம் 7 ஆண்டு தொடர் பணியாற்றி இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையினை தளர்த்தி 1.10.2019 முதல் பணியின் போது இறந்த / ஊனமுற்ற படைவீரர்கள் 7 ஆண்டுகளுக்கும் குறைவாக பணிபுரிந்தாலும் உயர்த்தப்பட்ட விகிதத்தில் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதி படைத்தவர்களாக கருதப்படுகிறது.

மேலும் 1.10.2019-ல் பத்தாண்டுகளுக்கு முன்னர் 7 ஆண்டுகளுக்கு குறைவாக தொடர் பணிபுரியாத இறந்த படைவீரர்களின் குடும்பத்தாருக்கும் மேலும் 1.10.2019 யிலிருந்து பத்தாண்டுகளுக்கு முன்னர் 7 ஆண்டுகளுக்கு தொடர் பணிபுரியாமல் இறந்த படைவீரர்களின் குடும்பத்தினருக்கும் இவ்வுயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 1.10.2019 முதல் பெற தகுதி பெறுகிறார்கள்.

முன்னாள் படைவீரர்கள் /ஓய்வூதியாரர்களின் குறைகளை களைய ஓய்வூதிய குறைதீர்க்கும் தனிப்பிரிவு இத்துறையினால் அமைக்கப்பெற்றது. இதன் மூலம் முன்னாள் படைவீரர்கள் / அவர்தம் குடும்பத்தார்களின் ஓய்வூதியம் குறித்த கோரிக்கைகள் சிறப்பான முறையில் தீர்வு காணப்பட்டது. மொத்த கோரிக்கைகளில் 97% தீர்வு காணப்பட்டது. இந்நேர்வுகள் தொடர் முயற்சியாலும் சம்பந்தப்பட்ட அலுவலர்களை இடைவிடாது தொடர்பு கொண்டதினாலும் மற்றும் வாரந்தோறும் மறுஆய்வு மேற்கொண்ட நிலையிலும் இந்த இலக்கினை எய்த முடிந்தது.

மேற்காணும் தொடர் முயற்சிகளுடன் குறை தீர்ப்பதற்கான கால அளவு 30 நாட்கள் என்ற நிலையில், தொழில்நுட்பத்தின் பங்களிப்பினால் 2014-2015 ஆம் ஆண்டு 87 நாட்களில் முறையீடுகளின் மீது தீர்வுகள் காணப்பட்ட நிலையில், 2018 இல் 25 நாட்களாகவும், 2020-21 இல் இக்குறைதீர்ப்பு கால அளவு இன்னும் குறைந்து 21-27 நாட்களிலேயே அனைத்து கோரிக்கைகளுக்கும் தீர்வு மேற்கொள்ளப்பட்டது. இவையனைத்தும் ஒருங்கிணைந்த முயற்சியாக மேற்கொள்ளப்பட்டு குறைகள் தீர்வு காணும் நாட்களும் குறைக்கப்பட்டது. முன்னாள் படைவீரர்களுடன் பேச்சுவார்த்தையினை ஊக்குவித்தல் மற்றும் மாநில முன்னாள் படைவீரர்கள் நலவாரிய / மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் மூலம்

முன்னாள் படைவீரர் குறை தீர்ப்பு குறித்து தகுந்த உத்வேகத்தை ஏற்படுத்தி முன்னாள் படைவீரர்களின் குறைகள் களைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர்கள் அவர்களின் உயிர்வாழ்வு சான்று ஒவ்வொரு ஆண்டும் நேரடியாகவோ அல்லது இணையம் வாயிலாகவோ சமர்ப்பிக்கப்படும் நிலையில் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் பெறுவதற்கு இச்சான்று அவசியமில்லை. மேலும், பணிக்கொடை, ஓய்வூதியம் போன்றவைகள் SPARSH என்ற புதிய செயலி மூலமும் வழங்கப்படுகிறது.

இந்திய இராணுவ அமைச்சக, அரசின் 28.09.2021 கடிதத்தின் மூலம் ஊனமுற்ற குழந்தை / உடன்பிறந்தோருக்கான குடும்ப ஓய்வூதியம் மாதாந்திர வருமானம் ரூ.9000/-க்கு இருத்தல் வேண்டும் என்ற வருமானம் உச்சவரம்பினை தளர்த்தி இறந்த படைவீரர் / ஓய்வூதியர் இறுதியாக பெற்ற சம்பளத்தில் 30% சாதாரண ஓய்வூதியத்திற்கு மிகாமல் இருக்கும் நிலையில் ஊனமுற்ற குழந்தை / உடன் பிறந்தோருக்கு குடும்ப ஓய்வூதியம் 08.02.2021 முதல் ஒப்பளிக்கலாம் என வழிவகுக்கப்பட்டுள்ளது.

7 வது ஊதிய குழுவிற்கு பின்னர், அதிகப்பட்ச ஊதியம் ரூ.2,50,000/- என அரசால் மறு நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி அதிகப்பட்ச ஓய்வூதியம் பெற்றோர்களின் இரு குடும்ப ஓய்வூதியமும் சேர்த்து குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது அதிகபட்ச குடும்ப ஓய்வூதியம் ரூ.1,25,000/-(2,50,000 இல் 50 சதவீதம்) மற்றும் ரூ.75,000/-(2,50,000/-இல் 30 சதவீதம்) சாதாரண குடும்ப ஓய்வூதியம் இராணுவ ஓய்வூதியதாரர்களுக்கு 01.01.2016 முதல் நீட்டிக்கப்படுகிறது.

முன்னாள் படை வீரர் மற்றும் அவர்களை சார்ந்தவர்களின் குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகள் (https://raksshapension.desw.gov.in) உட்பட ஓய்வூதியத்தை விரைவாக நிவர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட பிரத்யேக இராணுவ ஓய்வூதிய புகார் தீர்வு இணைய முகப்பு 14.01.2022 அன்று தொடங்கப்பட்டது. இந்த இணைய முகப்பு மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம் மூலம் குறைகளை விரைவாக

செயலாக்கும். இதன் மூலம். விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது விண்ணப்பம் குறித்த நிலை அறிய அவர்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் புகார் பதிவு உறுதி செய்து அனுப்பப்படும். குறைகளைத் தீர்ப்பதற்கான தரத்தை மேம்படுத்தும் நோக்கத்திற்காக விண்ணப்பதாரர்கள் தங்கள் கருத்துக்களையும் வழங்கலாம்.

<u>நலத்திட்டங்கள்</u>

2021-22 நிதியாண்டில் முப்படைவீரர் கொடிநாள் நிதி மூலம் ரூ.320 கோடி ஜனவரி 22 ஆம் நாளில் ஒதுக்கப்பட்டது. இதனால் 2018 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையிலுள்ள 1.58 லட்சம் கல்வி நிதி உதவி விண்ணப்பங்கள் ரூ.284 கோடி செலவிலும் பிப்ரவரி 2020-ம் ஆண்டிலிருந்து நிலுவையிலுள்ள 7883 திருமண நிதியுதவி விண்ணப்பங்கள் ரூ.36 கோடி செலவிலும் தீர்வு பெறும். இம்முயற்சி நிமித்தம் மொத்தமாக 1.66 இலட்சம் முன்னாள் படைவீரர்கள் பயனடைகிறார்கள். தரைப்படை போர் இழப்பு நல நிதி (ABCWF) யினை முப்படை போர் இழப்பு நல நிதி (AFBCWR) என பெயர்மாற்றம் செய்யப்பட்டு தரைப்படை மட்டுமல்லாமல், கப்பற்படை மற்றும் விமானப்படையில் உள்ள போர் / போரையொத்த நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு உயிர்நீத்த /ஊனமுற்றவர்களுக்கு நிதியுதவி நீட்டிப்பு செய்து மே 2020 முதல் வழங்கப்படுகிறது. போரில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணைத்தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தம் செய்யப்படுகின்றது. போரில் 60% க்கும் குறைவாக ஊனமுற்றவர்களுக்கு (கருணைத்தொகை) ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.4.00 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

பிரதம மந்திரி கல்வி உதவித்தொகை 2019-20 நிதியாண்டிலிருந்து ஆண் பிள்ளைகளுக்கு ஆண்டுக்கு ரூ.24000/- யிலிருந்து ரூ.30,000/-ஆகவும் பெண் பிள்ளைகளுக்கு ரூ.27,000/-யிலிருந்து ரூ.36,000/-ஆகவும் உயர்த்தப்பட்டது.

100% ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு இராணுவ மந்திரி முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து பிரதிமாதம் வழங்கப்பட்ட ரூ.1000/–நிதியுதவி 01.08.2021 முதல் ரூ.3000/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

மத்திய முப்படை வாரியத்தினால் பயனாளிக்கான நேரடி பணப்பரிமாற்றம் (Direct Benefit Transfer) and Unified Mobile Application for New Age Governance UMANG module Portal ஆகியவை வெற்றிகரமாக நிறுவப்பெற்றது.

அருணாச்சல் பிரதேசம் மற்றும் லடாக் போன்ற மாநில / யூனியன் பிரதேசங்களிலும் முப்படை வீரர் வாரியம் முன்னாள் படைவீரர்/ சார்ந்தோர்களில் நலனுக்காக அமைக்கபெற்றுள்ளது.

தொழு நோய், மனநலம், மாற்றுத்திறனாளிகள், பக்கவாதம் மற்றும் காசநோயினால் பீடிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்கள் தங்குவதற்கு பராமரிப்பு இல்லம் (Cheshire Homes) டெல்லி, லக்னோவிலும் மற்றும் டெராடூன் இல் Raphael Ryder International Cheshire Homes உள்ளது. இவ்வில்லங்களில் தங்கியிருப்பவர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி ஆண்டுக்கு ரூ9000/–யிலிருந்து ரூ.15000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உயர்த்தப்பட்ட இத்தொகை 1.04.2021 முதல் மத்திய முப்படை வாரியத்தினால் வழங்கப்பட்டது.

<u>மறுவாழ்வு</u>

இத்துறை புதிய வேலை வாய்ப்பு திட்டங்கள் உருவாக்கவும் மற்றும் புதிய தொழில் நுட்ப சேவைகள் மூலம் முன்னாள் படைவீரர்களுக்கு பாதுகாப்பு சார்ந்த வேலைவாய்ப்புகள் அன்றி பிற துறைகளிலும் வேலைவாய்ப்பு பெற வழிமுறைகள் கண்டறிய முயல்கிறது. இதற்கான வழிமுறை 06.02.20–ல் மைய புனரமைப்பு இயக்ககம் மூலம் அரசு தொழிற்சேவை அறிமுகப்படுத்தப்பட்டு கழகங்கள் மாநில முன்னாள் படைவீரர் மூலம் செயல்படுத்த திட்டம் தீட்டப்பட்டது.

குறுகிய கால இராணுவ பணியின் முதல் பணி உறுதி காலத்தை முடித்து விட்டு முன்கூட்டியே ஓய்வு பெற்ற குறுகிய கால சேவை ஆணைய அதிகாரிகளுக்கு முன்னாள் படைவீரர் அந்தஸ்து வழங்குவது தொடர்பாக அறிவிப்பு 16.02.2020 அன்று

வெளியிடப்பட்டது. இது குறுகிய கால சேவை கமிஷன் மூலம் நுழைவதை மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற்றும்.

படைபணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் குறுகிய கால சேவை ஆணையத்தின் (SSC) அதிகாரிகளால் இராணுவத் தரங்களைப் பயன்படுத்துவதற்கான நீண்ட கால நிலுவையில் உள்ள கோரிக்கையும் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 27.07.1983 தேதியிட்ட முந்தைய அரசாணை, 23.03.2021 தேதியிட்ட ஒரு ஆணையின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது, இதன் மூலம் இராணுவத்தின் குறுகிய கால படை அதிகாரிகள் முன்னாள் படைவீரர் அந்தஸ்தைப் பெற தகுதியுடையவர்களாக இருந்தால், பணியில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் அவர்கள் முன்னாள் படை அதிகாரிகளாக அனுமதிக்கிறது. இந்த முடிவு இளம் ஆர்வலர்கள் மற்றும் ஏற்கனவே உள்ள இளநிலை படை அதிகாரிகளுக்கு ஒரு பெரிய ஊக்கமாக இருக்கும், மேலும் குறுகிய கால இராணுவச் சேவையை மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற்றும்.

மைய புனரமைப்பு வாரியம் மூலம் வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு முகவர்களின் செயல்பாடு தொடர்பான வழிகாட்டுதல்கள், அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் போட்டித்தன்மையைக் கொண்டு வருவதற்காக மறு வரையறைகள் செய்யப்பட்டன. மேலும் சேவை கட்டணங்களும் வெகுவாக குறைக்கப்பட்டன.

<u>சுகாதார பாதுகாப்பு</u>

இந்தியா மற்றும் நேபாளத்தில் வசிக்கும் அசாம் ரைபிள்ஸ் படை பிரிவை சேர்ந்த இராணுவ ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு முன்னாள் ராணுவ வீரர்களின் பங்களிப்பு சுகாதாரத் திட்ட (ECHS) வசதிகளை வழங்குவதற்கான ஆணைகள் பிப்ரவரி 2019–ல் அரசு வெளியிட்டது இதனை அடுத்து மார்ச் 2019 இல் இந்த வசதிகள் உலகப் போரின் படைவீரர்கள், அவசர கால ஆணைய அதிகாரிகள் (ECO), குறுகிய கால பணிச்சேவை ஆணைய அதிகாரிகள் (SSCO) மற்றும் முதிரா நிலை படை பணி ஓய்வு பெற்றவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல ஆணை நாள் 01.01.2020 மூலம் முன்னாள் படைவீரர்களின் 25 வயது கடந்த ஆண் பிள்ளைகள் ஊனமுற நேரிடின் அவர்களுக்கு மருத்துவ உதவி ECHS மூலம் பெற்றுக்கொள்ளலாம் என மைய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சக ஆணை, நாள்.07.05.2018 ன்படி சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் இச்சலுகையினை பெறலாம்.

முன்னாள் படைவீரர்கள் பங்களிப்பு மருத்துவமனைக்கு (ECHS) வருகை புரியும் கொரானா நோய் பரப்புவதற்கு வாய்ப்புள்ளதினால் இதனை தவிர்க்கும் பொருட்டு மருந்து மாத்திரைகள் பாலிகிளினிக் வருகை புரியாமலே (பாலிகிளினிக் ஒப்புதல்லாமலே) மீள பெறலாம்.

முன்னாள் படைவீரர் சுகாதார பங்களிப்பு திட்ட பயனாளிகளின் நன்மைக்காக, அரசு கடித நாள் 25.03.2022 மூலம் 15 நாட்களிலிருந்து 30 நாட்கள் வரை கிடைக்கபெறாத மருந்துகள் மற்றும் இதர பொருட்கள் வெளிச்சந்தையில் ரூ.25000/- வரை ஒருமுறை வாங்கிடலாம். சிறப்பு வகையாக ரூ.75000/- வரையிலும், புற்றுநோய் மருந்துக்களுக்காக ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக ஒவ்வொரு முறையும் வாங்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர் பங்களிப்பு சுகாதார திட்டத்தின் கீழ் இரண்டு புதிய மையங்கள் யோல் மற்றும் புவனேஸ்வரில் அமைக்கப்பெற்று, ஹிமாச்சல் பிரதேசம் மற்றும் ஒடிசா மாநிலத்திலுள்ள வறிய நிலையில் உள்ள மற்றும் தொலைதூர பகுதியில் உள்ள முன்னாள் படைவீரர்களும் இதனால் பயனடைகிறார்கள். இப்புதிய மையங்கள் 2021 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

21/7/2022 21/7/22

உதவி இயக்குநர் (மறுவாழ்வு)

21-7-22

இணை இயக்குநர்